உ

சிவமயம்.

மஞ்சட்கொல்லையென்று வழங்கும்

குங்குமவன

# ஸ்தலபுராணவசனம்.

இது

வடமொழியினின்றும், நாகை நாஷனல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும், மஞ்சட்கொல்லை ஸ்ரீ ஞானசம்பந்த சபைத் தலைவருமாகிய

ஸ்ரீமத் மு. சுவாமிநாத தேசிகரவர்களால்

மொழிபெயர்க்கப்பெற்றது.

இஃது

மஞ்சட்கொல்லை

ஸ்ரீமான் தி. மு. ரும. தியாகராச முதலியார்.
,, தி. மு. ரும. இராமசாமிமுதலியார்.

இவர்களால்,


நாகை,

ஸ்காட்டிஷ் பிரஸ் பிரஸில், பதிப்பிக்கப் பெற்றது.

1917.

C. B. P. N. 17-310.

MAHAMAHOPADHYAYA






ஞானலிங்கம்.




ஞானம்பிகை.



நந்தி.






பொய்யா விநாயகர்.



வெற்றிவேல் முருகன்.



நடராஜர்.

உ

சிவமயம்.

# முகவுரை.

*அங்கு இங்கு என்னாதபடி எங்கும் பிரகாசமாய்*
*ஆனந்த பூர்த்தியாகி, அருளொடு நிறைந்த பொருளின்*
*அநுக்ரஹம் யாவர்க்கும் உண்டாகுக.*

ஆஸ்திகாளான நண்பர்காள் !

ஈச்வரன் இவ்வுலகில் இரண்டு விதமாக வணங்கப்படுகிறார். அவையாவன ; ஒன்று, நிர்க்குணம் அல்லது அரூபமாகவும், மற்றொன்று, ஸகுணம் அல்லது, ரூபகரமாகவுமாம். ஸகுணமாய்த் தொழப்படுவதுதான் விக்ரகஆராதனம் எனப்படுவது. இக்கலியில் நிர்க்குணத் தியானத்தில் மனம் கட்டுப்படாதென்பதை முற்றுமறிந்த பெரியோர்கள் விக்ரக ஆராதனத்தையே முக்கியமாக வற்புறுத்தியிருக்கிறார்கள்.

ஆன்மாக்கள் தங்களை இயற்கையாய் மறைத்துள்ள பாச பந்தத்தினின்றும் விடுபட்டு ஈசுவரனை அறியும்பொருட்டே முற்றறிவுடைய கடவுளால் நமக்கு நான்கு வேதங்கள் தந்தருளப்பட்டிருக்கின்றன. விவேகிகளோ, வேதங்களில் விதித்தபடி நின்று, ஒழுகி, இப்பவ ஸாகரத்தைக் கடந்து, மோக்ஷமெனும் வீடடையும் வழியைத் தேடிக்கொள்வர். அவிவேகிகள் வேதக் கருத்துக்கு மாறாக நடந்து இப்பவ ஸாகரத்திலேயே கிடந்து தத்தளிப்பர்.

மேற்கூறிய நான்கு வேதங்களின் பொருள்களை விளக்கிக் காட்டுவனவாய் உள்ளவைகளே ஆகமபுராண இதிகாசங்களாகும். ஈசுவரன், ஜீவர்களிடத்துள்ள கருணையால், தனது அடியார்களின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி அவர்களை நல்வழிப் படுத்தும்பொருட்டு உருவத் திருமேனியுடன் தலங்கள்தோறும் திருக்கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கிறார். இவ்வாறு

அநுக்கிரஹத்தின் பொருட்டே பரம காருண்யத்துடன் எழுந்தருளியிருக்கும், மகா மூர்த்திகளின் மகிமைகளையும், அந்தந்த ஸ்தலங்களிலுள்ள தீர்த்தங்கள் முதலிய விசேஷங்களையும் அவ்வத்தலங்களில் பூஜித்து சிவானுபூதியைப் பெற்ற அடியார்களின் பெருமைகளையும், எடுத்துரைக்கும் புராணங்களே, ஸ்தல புராணங்களாம்.

மோக்ஷபூமி யென்றும், ஞானபூமி யென்றும், எத்தேசத்தாராலும், எச்சமயத்தாராலும், ஒப்புக்கொள்ளப்பட்ட, நமது பரதகண்டத்தில், அதிலும் காவிரிநதி பாயும் சிறப்பு வாய்ந்த காரணத்தால், நீர் வளம், நில வளம், பொருந்திய இச்சோழவள நாட்டின்கண், திவ்ய ஸ்தலங்கள் பல இருக்கின்றன. இத்தலங்களுக்கெல்லாம் முற்காலங்களில் உள்ள மஹான்களால் புராணங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கவேண்டு மென்பதை, பற்பல ஆதாரங்களைக்கொண்டு நம்ப வேண்டியதாயிருக்கிறது. தற்காலத்தில் வெளிப்பட்டிருக்கிற புராணங்களைத் தவிர மற்ற ஸ்தலங்களுக்கு புராணங்கள் இல்லையென சிலர் நினைக்கின்றார்கள். அவ்வாறு நினைப்பது தவறே. ஏனெனில், மத்திய காலங்களில் நமது நாட்டில் அரசு புரிந்த அன்னிய மத அரசர்களின் காலங்களில் எத்தனையோ ஸ்தலங்களில் உள்ள மூர்த்திகள், புராணங்கள் முதலியவைகள் அக்கொடுங்கோன் மன்னர்களிடத்து சிக்கிக்கொள்ளாவண்ணம், அக்காலத்துள்ள பக்தர்களால் மறைத்து வைக்கப்பட்டு இருந்திருக்கின்றன. அக்கொடுங்கோல் மன்னர்களின் காலங்கள்போய் காருண்ய ஆங்கில அரசாக்ஷி ஏற்பட்ட இக்காலத்தில் பூமியினின்றும் எடுக்கப்பட்டுவரும் விக்ரகங்கள் பழைய கிரந்தங்கள், முதலியவைகளே அவற்றிற்குப் போதிய சாக்ஷியாகும். ஆகையால் வெளிப்பட்டுள்ள புராணங்கள் தவிர இன்னும் வெளிப்பட வேண்டியவைகளாய் அனேகம் இருக்கலாம். எதையும் விசாரித்து உண்மை தெரிந்துகொள்ளாமல், சிலர் தற்காலத்தில் வெளியாகும் புராணங்கள் எல்லாவற்றையுமே நூதனம் என்றும், தற்காலத்தவர்களால் செய்யப்பட்டன வென்றும், நினைப்பது, தவறேயாகும்.

முற்காலத்தியவர்களால் இயற்றப்பெற்ற புராணங்களையும் தற்காலத்தில் ஏற்படும் நூதன புராணங்களையும் விவேகிகள் எளிதில் கண்டுகொள்வார்கள். ஆகையால், எதையும் தீர விசாரித்து உண்மை அறிந்து கொள்வதே, விவேகிகளுக்கு அழகாகும்.

ஆதி காலங்களில் இத்தகைய ஸ்தலபுராணங்கள் யாவும், ஸம்ஸ்கிருத பாஷையிலேயே இருந்திருக்கின்றன. பிற்காலங்களில், ஸம்ஸ்கிருத பாஷாஞானம் வரவரக் குறைவுறப் பலரும் அப்புராணங்களை எளிதில் உணர்ந்துகொள்ளும் பொருட்டு அவைகளைத் தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

முன்னோர்களால் ஏற்படுத்தியுள்ள ஷை ஸ்தல புராணங்களுள் ஒன்றாகிய குங்குமாரணியம் என்றும், ஹரித்திரவனம் என்றும், பல நாமங்களைப் பெற்று, தற்காலத்தில் மஞ்சட்கோல்லை என வழங்கிவரும் திவ்ய க்ஷேத்திரத்தின் புராணமும் இது வரையில் ஸம்ஸ்கிருதத்திலிருந்து கொண்டிருந்தது. இந்த ஸ்தல வாசிகளாயும் ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுளின் பக்தர்களாயுமுள்ள செங்குந்தர் மரபினைச் சேர்ந்த அடியார்களின் முயற்சியாலும், ஆங்கு ஸ்தாபிக்கப் பெற்றுள்ள ஸ்ரீ ஞானசம்பந்த சபையாரின் வேண்டுகோளினாலும், ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஷை புராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்துத் தரவேண்டுமென்று, மேற்படி சபையின் தலைவராயும், தமிழ், ஸம்ஸ்கிருத மாகிய இவ்விரு பாஷைகளிலும் அதிக பாண்டித்யம் உடையவராயும், சென்னை மஹா மஹோபாத்தியாயர் பிரம்மஸ்ரீ உ. வே. ஸ்வாமிநாதய்யர் அவர்கள் முதலிய பல பெரிய மேதாவிகளால் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றவராயும், பற்பல ஸத் ஸங்கங்களை ஸ்தாபித்து, ஆங்காங்குச் சென்று, தான் கற்றதைப் பிறரும் அறியவேண்டுமெனும் பேரவாவோடு, உபந்யாஸ வாயிலாக, நமது பூர்வீக வைதிக மத உண்மைகளைப் போதித்துவரும் உத்தமோத்தம குண சீலராயும், தர்மபுர ஆதீன முதல் பண்டாரஸந்நிதி ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகரின் ஆசாரியரான ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிகரின் வம்சத்தினராயும், சிவத்தொண்டே பெருந் தொண்

டனைப் பூண்டுள்ளவராயும், கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக, என்ற திருவள்ளுவனார் வாக்கிற்கு இலக்கியமாயுள்ளவராயும், தற்காலம் நாகபட்டணம் நாஷனல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டித ஸ்தானத்தை வகித்து வருபவராயுமுள்ள, ஸ்ரீமாந், மு. ஸ்வாமிநாத தேசிகர் அவர்களைக் கேட்டுக்கொள்ள, அன்பர்களின் பணியே திருப்பணியாகக் கருதியிருக்கும் தேசிகர் அவர்கள் ஷை ஸ்தலவாசிகளின் வேண்டுகோளுக் கிணங்கி, ஸம்ஸ்கிருதத்திலுள்ள மேற்படி புராணத்தைத் தமிழ் வசன நடையில் செய்திருக்கிறார்கள்.

அதுவே இப்புராணமாகும். இப் புராணம் மொழி பெயர்ப்பதில் ஷையார் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமம் அதிகமேயாகும். இம்மொழிபெயர்ப்பில் பொருள் சிறிதும் விடுபடாமலும், எல்லாரும் எளிதில் வாசித்து உணர்ந்துகொள்ளும் வண்ணமும், மிக எளிய நடையில் எழுதியிருப்பது நிரம்பவும் புகழக்கூடியதே.

இப்பெரும் புண்ணியத்தைக் கைக்கொண்டு சிரத்தையுடன் மொழிபெயர்த்து உதவிய ஸ்ரீமாந், மு. ஸ்வாமிநாத தேசிகர் அவர்களுக்கும், இதற்குப் பொருளுதவி செய்து அச்சிட்டு வெளிப்படுத்த முன்வந்து உதவிய ஸ்ரீமான், தியாகராஜ முதலியார், இராமஸாமி முதலியார் அவர்களுக்கும், இதனை அச்சிடுவதில் பிழையறப் பரிசோதித்துதவிய ஸ்ரீமான், வி. ஸ்வாமிநாத பிள்ளை அவர்களுக்கும், இவற்றிற்கெல்லாம் தூண்டுகோலாய் நின்ற மஞ்சட் கொல்லை, திருஞானசம்பந்த சபை அங்கத்தினர்களுக்கும், இப் புராணத்தைப் பக்தி சிரத்தையுடன் படிக்கும் சிவபக்த சிரோன்மணிகளுக்கும், எல்லாம் வல்ல இறைவன் எப்பொழுதும் அருள்புரிவாராக.

ஹிந்துமதாபிமான சங்கம், நாகை.

ப. லெ. வெங்கட்ராம சாஸ்த்ரி,
காரியதரிசி.

சிவமயம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ. ஆறுமுக நாவலரவர்கள்

மாணாக்கரும், தஞ்சை S. P. G. காலேஜ்

தமிழ்ப்பண்டிதருமாயிருந்த

ச. சிவலிங்க பிள்ளையவர்கள்

குமாரர்

நாகை நாஷனல் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

கருந்திட்டைக்குடி

ஸ்ரீமான்: வி. சாமிநாத பிள்ளையவர்கள்

இயற்றிய

# சிறப்புப் பாயிரம்.

---

நேரிசை யாசிரியப்பா.

கங்கையு மதியமுந் தங்கிய செஞ்சடைக்
கண்ணமர் நெற்றிப் புண்ணிய மூர்த்தி
யடியவர் தம்வினை பொடிபடும் வணக்கனை
யாகம நெறிகொடு பூசனை புரிவான்
கொள்ளுநமு வுருவினில் விள்ளவி லொன்று
முருவா ருவமெனுந் திருமேனி தாங்கி
யெழுந்தருள் சிவதல மெண்ணில வவற்றின்
மான்மிய மனைத்து நான்மறை தேர்ந்து
புலனெறி விலங்கிய நலமலி முனிவர்
பல்லோர் கேட்பச் சொல்லினர் சூதர்
அன்னவற் றொன்று மாலூர் மான்மியத்
துற்றொளிர் சிறப்புப் பெற்றுத் திகழு
மணிசேர் குங்குமா ரணியமென் றேதும்
வான்றோய் பொழில்சேர் மஞ்சட் கொல்லை
மான்மியந் தன்னை வடமொழி யின்றுந்
தமிழ்மொழி வசன நடையிற் றருகெனத்
தண்ணிய வப்பதிப் புண்ணிய வான்கள்
பூண்டபே ரன்பின் வேண்டின ராக

வீண்டிய பிறப்பி னிதுபெரும் பேறென
வுளமலி மகிழ்வின் வளமுற முடிக்கே
யெழுதா வெழுத்திற் பழுதறப் பதித்தனன்
கற்பகச் சோலை ககனத் துறுமெனப்
பொற்புறு புலவர் புகலுவ ரஃது
நம்போன் மாறா நல்வள முடைத்தெனி
னும்பர்ச் சென்றினி துணரலா மென்ன
வெண்ணிப் புகுந்தாங் கெழிலுற வளர்தருத்
தண்டலை யுடுத்த வொண்டமிழ்க் கமலை
யுத்தமர் பணியுஞ் சத்திய ஞானி
ஞானப்ர காச நன்முனி வரனார்
மான பரம்பரை வளரவந் துதித்தோன்
ஆனினந் தன்னிற் றேனு வென்னக்
கற்றவர் குழுமி முற்றுற வாய்ந்து
கற்பம் புகலினு மற்பமுங் குறையாப்
பெருவள மமைந்து மருவுமிப் புவியி
லெந்நாட் டினுமுயர் நன்னா டென்னச்
சீரூர் நீர்நாட் டாரூர் நகரான்
நந்தா மணிகளுட் சிந்தா மணியென
வித்துவக் குழாத்து மகத்துவ முற்றோன்
கற்றார்க் கெல்லா நற்றா யில்லம்
தெருட்குரித் தாய வருட்பெருங் குன்றம்
முத்தி தருஞ்சிவ பத்திப் பிண்டம்
பொய்தெரித் தகற்றி மெய்யிஃ தென்னுஞ்
சைவசித் தாந்தத் தெய்வ வைப்பு
எழுத்துமுத லாக வழுத்திலக் கணமெலாங்
கடைபோக வுணர்ந்த தடையறு மறிஞன்
பவப்பிணி யாவினித் துவக்குறா வண்ணம்
நெஞ்சார் தரவுயர் பஞ்சாக் கரமதை
யென்போ லியர்பலர்க் கன்போ டுணர்த்துந்
தேசார்ந் தொளிர்சிவ பூசா துரந்தரன்
முத்து வைத்திய நாததே சிகன்றன்
எண்ணில் காலம் பண்ணிய தவத்தான்
வலம்புரிப் பிறந்த நலம்புரி முத்தென
வந்தவ தரித்த சுந்தர புருடன்
என்னுள மகலா திருக்குந்
தென்னமர் சாமி நாததே சிகனே.

உ

சிவமயம்.

# ஸ்ரீ ஹரித்ரவநம், குங்குமாரண்யம் என்னும் திவ்விய நாமங்களுள்ள

# மஞ்சட் கொல்லை ஸ்தல புராண வசனம்.

துதி.

ஸ்ரீ விநாயகர்.

கங்கையு மதியமுங் கதித்த செஞ்சடை
மங்கையொர் பங்கினன் மகிழ்ந்த வத்தலங்
குங்கும வனமெனு மஞ்சட் கொல்லையின்
ஐங்கர னடிமல ரகத்த லர்த்துவாம்.

ஸ்ரீ ஞானலிங்கேசன்.

தேனூர் மலர்க்கொன்றை சிரத்தணிந்த தேவர்பிரான்
ஞானுரெனக்கேட்டு நன்மைபெறு ஞானிகட்கா
வானுடர் போற்ற வருஞான் லிங்கமெனு
ஞானு கரற்பணிந்து நம்வினைகள் போக்குவமே.

வான முப்புகழ், ஞான லிங்கனை
ஊன நீங்கவே, த்யானம் செய்குவாம்.

ஸ்ரீ ஞானவல்லிநாயகியார்.

ஞான லிங்கனை நண்ணி வாழ்ந்திடும்
மான மென்மயில் போலு மம்மையை
ஈன நீங்கவே யெம்ம னோர்க்கருள்
ஞான வல்லியை நம்பி வாழ்குவாம்.

ஸ்ரீ பொய்யா விநாயகர்.

வாவி சூழ்திரு மஞ்சட்கொல்லையில்
ஓவி லாதருண் மாரி பெய்திடுங்
காவி சேர்கருங் கண்ணி யீன்றபொய்
யாவி நாயக னுவி நாயகன்.

ஸ்ரீ வெள்ளைவாரணர்.

வெள்ளை வாரணப், பிள்ளை யார்பதம்
உள்ளு வார்துயர், விள்ளு வாரரோ.

சீராரௌவை யார்துதித்த சீதக்களபக் கவிகேட்டு
ஏரார்பூசை யுட்கொண் டிதயமகிழ்ந்து கைலைதனிற்
பாராரறியச் சேர்த்தருளும் பரனேமஞ்சள் நகர்வாழும்
காரார்வெள்ளை வாரணப்பேர்க் கணேசனிருதாள் கவின்சரணே.

ஸ்ரீ வெற்றி வேலாயுதக்கடவுள்.

பற்றிலார் பற்று கின்ற பரம்பொருள் யாதோ வென்னிற்
கற்றிலார் கருணை மாட்டாக் கடவுட் னடியே யாகும்,
மற்றியா மறிய வேண்டா மஞ்சளா ரணிய மேவு
வெற்றிவே லவரே நமக்கு மெய்க்கதி யளிக்குந் தெய்வம்.

தெய்வ யானையைத் திகழ்திரு வள்ளியை
மெய்வரு சத்தியாம் வேலினைத் தாங்குவாய்
பொய்வரு மென்றனைப் புனித னாகவே
செய்குவா யென்றியான் சிந்தை செய்குவேன்.

தீர மார்திருச் செவ்வேள் துணைவராம்
வீர வாகுவு மற்றுள வீரரும்
வார மானசண் டீசனு மன்பரும்
ஏர தாகவென் சிந்தை யிருக்கவே.

---

ஓம் குகாய நம:

ஸ்ரீ மகா கைலாசத்திலே புண்ணிய ஸ்வரூபமாய் விளங்குகின்ற ஈச்வரனாகிய சிவபெருமானது ஆலயத்தில் விளங்கும் சகல மங்களகரமாய் சர்வ ஞானசொரூபமான மண்டபத்தில் ஸ்ரீ சூத புராணிக மஹாரிஷியும், நைமிசாரணிய வாசிகளாகிய சௌனகாதி ரிஷீச்வரர்களும், சிவபக்தியே வடிவமாகவும், ரத்னகுண்டலங்களை யணிந்த அழகிய காதுகளை யுடையவர்களாகவும், வேத வேதாந்த தத்துவங்களை யறிந்தவர்களாகவும், எல்லா சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்பவர்களாயும், யோகாப்பியாசத்தோடு கூடியவர்களாயும்,

சதா பிரம்மஞானத்தைக் கொடுக்கும் தத்துவ சாஸ்திரங்களைப் பாராயணஞ் செய்பவர்களாயும், லோகத்திலுள்ளவர்களுக்கு அனுகூலத்தையே செய்யும் சித்த விருத்தியையுடையவர்களாயும், சர்வ பூதங்களிடத்தும், சர்வ ஜீவர்களிடத்தும தயாள குணமுள்ளவர்களாயும், அசூயை யற்றவர்களாயும், மேன்மையுடையவர்களாயும், எக்காலமும் விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டிருப்பவர்களாயும், காமக் குரோதாதி குற்றங்களை நீக்கி இந்திரிய நிக்கிரகம் செய்த ஜிதேந்திரியர்களான சனகாதி முனீச்வரர்களோடு கூடியிருந்தார்கள்.

பின்னும் சூதபுராணிகரை நோக்கிச் சௌனகாதி முனிசிரேஷ்டர்கள் சொல்லும் வசனம் என்னவெனில், ஸ்ரீ நந்திகேசுவரப் பெருமானிடத்து அநேக க்ஷேத்திர மாகாத்மியங்களாகிய சிவக்ஷேத்திர மகிமைகளைக் கேட்டிருக்கிறோம் என்று சொல்லுகையில், ரிஷி சிரேஷ்டர்களுக்கு மத்தியில் மகா தேஜோரூபியாய் விளங்கும் சம்பார் என்னும் மகாமுனிவர் அப்பொழுது அவ்வாக்கியங்களைக் கேட்டு, மேன்மையான திருக்ஷேத்திரமகிமையைப் பின்னும், நந்தியெம்பெருமானிடத்து மிகுந்த ஆதரவோடுங் கேட்கின்றார். அவ்விதம் ஆதரவாய்க் கேட்கின்ற சம்பார முனிவரைப்பார்த்து ஸ்ரீ நந்திகேசுரர் சொல்வது:—ஓ! தபசியே! நான் சொல்வதைப் பக்தியோடும் சாவிதான மனதோடும், கேட்பீராக. நவகண்டங்களோடு கூடி விளங்குகின்ற மிகவும் சுபகரமாய் விளங்கும் பூலோகத்தில் ஜீவன் முக்தியைத் தரத்தக்க அனேக சிவ க்ஷேத்திரங்களில் பக்தர்களுக்கு வேண்டிய அபீஷ்டசித்தி சுகங்களைத் தரத்தக்கன சில. அவைகள் எல்லாவற்றிலும் ஹாடக க்ஷேத்திரம் என்னும் திருவாரூர் மிகவும் விசேஷ க்ஷேத்திரமாகச் சொல்லப் படுகின்றது; அதில் சிவபெருமான் திவ்ய சாந்நித்தியராயும் போகமோக்ஷங்களைக் கொடுக்கக்கூடியவராகவும், விளங்குகின்றார். பின்னும் அந்த க்ஷேத்திரத்தில் ஜெனித்த ஆன்மாக்கள் ஜீவன் முக்தநிலையிலே யிருப்பார்கள். ஹாடகக்ஷேத்திரம் என்னுஞ் சொல்லைக்கேட்ட புருஷன் எல்லாப் பாபங்களி

னின்றும் விடுபடுகின்றான். கமலாலயம் என்னுந் திவ்யதீர்த்தத்தோடுகூடிய அந்தத் திருவாரூர் என்னுந் திவ்யக்ஷேத்திரத்தைத் தெரிசித்தவர்கள் வேண்டிய இஷ்டசித்திகளை யடைகின்றார்கள். இவ்விதமான திருவாரூர் க்ஷேத்திர புராணத்தில் இக்காலத்து மஞ்சட்கோல்லை என்று வழங்குகிற குங்குமவன மான்மியம் கூறப்பட்டிருக்கின்றது.

---

## ஜமதக்கினி முனிவர் சரித்திரம்.

---

ஸ்ரீநகரம் என்று வழங்குகின்ற ஹாடகக்ஷேத்திரத்தைத் தெரிசிப்பதற்காக, மனைவி மக்களோடும் மகாபக்திமானாகிய பாடலிபுரம் மகாராஜா திருவாரூர்ப் பூங்கோயிலுக்கு வந்தார். அதேசமயத்தில் மிகுந்த தவசிரேஷ்டர்களாயும், சிவபக்தியோடு கூடினவர்களாயும், விபூதியைத் திரிபுண்டரமாக அணிந்த சிரம் நெற்றிமுதலிய உறுப்புக்களை யுடையவர்களாயும், உருத்திராக்ஷ மணிந்த கழுத்துக்களை யுடையவர்களாயும் சிவசின்னமாகிய ஜடாமகுடதாரிகளாயும், ஸ்படிக லிங்கத்தைக் கையில் ஏந்திப் பூஜிப்பவர்களாயும் உள்ள அகஸ்தியர் முதலிய சப்த ரிஷிபுங்கவர்களும் ஸ்ரீ தியாகராஜ சுவாமியைத் தெரிசிக்கும் பொருட்டு வந்தார்கள். அவர்கள் மத்தியில் ஜ்வலிக்கின்ற தபாக்கினியை யுடையவராகிய ஜமதக்கினிமுனிவரும் வந்தார். வந்த ஜமதக்கினி முனிவர் மிகுந்த அழகுடையவளும் மந்தகாசமாகிய புன்சிரிப்புடையவளும், கொவ்வைக் கனிபோன்ற உதடுகளையும், பூர்ண சந்திரன் போன்ற முகத்தையும், இளமூங்கில் போன்ற கழுத்தையும், குமிழம்பூப் போன்ற அழகிய மூக்கையும், பருவதம் போன்ற கச்சையணிந்த தனங்களையும், சர்ப்பம்போன்ற அரசிலையணிந்த நிதம்பத்தினையும், இளவாழைபோன்ற துடையினையும், செம்பஞ்சுக்குழம்பூட்டிய பாதங்களையும், பெண்யானையின் நடைபோன்ற நடையினையும், பாதாதிகேச பரியந்தம் வயிரம் மாணிக்கம் முதலிய நவரத்னங்கள் பதித்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், உயர்ந்தசரிகையினையுடைய பீதாம்பரப்

பட்டையணிந்திருப்பதாலும், இயற்கையழகோடு செயற்கையழகும் பொருந்திய பாடலிபுர ராஜபுத்திரியை முனிசிரேஷ்டர் கண்டு மோகித்து, மன்மதாவஸ்தையால் பிடிக்கப்பட்டார். பிடிக்கப்பட்டவுடன், ராகுவினால் பிடிக்கப்பட்டு ஒளியிழந்த சந்திர சூரியர்களைப்போல, ஜமதக்கினி முனிவருக்குத் தவங்களெல்லாம் நஷ்டமாயின. இதைக் காசிபர் முதலிய முனிசிரேஷ்டர்கள் அறிந்து மிகவும் ஆச்சரியப்பட்டவர்களாய் விசனத்துடன் கையை முறுக்கிக்கொண்டு, ஹா! ஹா! இதென்ன தவறுதல் ஞானக்கோத்துக்கெல்லாம் கொடும்பழியாயிற்றே! இவ்விதமான தப்பெண்ணம் ஈசுரசன்னிதியில் உண்டாகலாமாவென்று சொல்லி, இப்பாபத்தை நீக்கவேண்டுமென்று பிறர் கஷ்டங்களுக்குத் துக்கப்படுபவர்களாகிய சப்தமுனிவர்கள், இந்த ஜமதக்கினி முனிவரது மனதில் உண்டாகிய பாபத்தைப் போக்கவேண்டும் என்றும், சற்று முன்வரையில் அசையாது அரசமரம்போன்ற அசைவற்ற மனமுடையவராம் இவரது காலவித்தியாசத்தால் ஏற்பட்ட விதியால் இவருக்கு இங்ஙனம்நேர்ந்தது, இதைப் பரமேச்வரரே நீர் மன்னித்துக்காத்தருளவேண்டுமென்று சிவபெருமானைப் பிரார்த்திக்கையில், சிவபெருமான் திருவருளால் சரஸ்வதி தேவியானவள் ஆகாசவாணியாகப் பின்வருமாறு கூறுகின்றாள். அவ்வசரீரிவாக்கியம் யாதோவெனில் :— என்னுடைய இத்திருவாரூர் க்ஷேத்திரத்திற்குக் கிழக்கில் பத்ரீவனம் (கீழ்வேளூர் ஸ்தலம்) என்னும் இலந்தைக்காடு இருக்கின்றது. அது ஒரு யோசனைவிஸ்தார முடையது. அந்த க்ஷேத்திரத்திற்குக் கிழக்கே வியாசாஸ்ரமம் என்னும் ஒரு க்ஷேத்திரம் உள்ளது; அதில் சிவபெருமான் வியாசலிங்கம் என்னும் பெயரோடு வீற்றிருக்கின்றார்; அது மகா மகிமையையுடையது; அதன் கிழக்கில் வசிஷ்டர் காமதேனுவின் பாலைக் காய்ச்சிக் கடைந்து எடுத்த வெண்ணெயினால் சிவலிங்க ரூபமாய்ப் பிரதிஷ்டை செய்யப்பட்ட வெண்ணெய் லிங்கத்தையுடைய நவநீதபுரம் என்னும் க்ஷேத்திரம் உள்ளது. அது முசுகுந்த சக்ரவர்த்திக்குச் சொப்பனத்தில் காணப்பட்டு அவரால் ஆலயத்திருப்பணி செய்விக்கப்பெற்று அவருக்கு மிகுந்த

மேன்மைகளைச்செய்வித்தது. இந்த க்ஷேத்திரத்திற்குக் கிழக்கில் அஷ்டதிக்கிலும் மிக்க தேஜஸோடு விளங்குகின்ற ரேத்தின புரீச்வர ஸ்வாமி யென்னும் நாமத்தையுடைய ரெத்தினலிங்கம் இருக்கின்றது. (இந்த ரெத்தின லிங்கம் இருக்கும் இடம் பொருள்வைத்தசேரி என்னும் புரவச்சேரியாகும்). இந்த ரெத்தினலிங்கத்துக்கு ஈசானபாகத்தில் சிவ பெருமான் ஞான லிங்க சொரூபியாய் விளங்குகின்றார் (ஞானலிங்கம் விளங்கும் இடம் மஞ்சட் கொல்லை யெனவழங்கும் குங்குமவன மாகும்.)

(இந்த ஞானலிங்கம் நாகபட்டினம் ஸ்ரீ காயாரோகண சுவாமியைத் தனக்குக் கிழக்கே விளங்கும்படியாகப் பெற்றது). இந்தக் குங்குமவனம் போகமோக்ஷங்களைக்கொடுக்கக் கூடியது; மனுஷர்களுக்கு அவரவர் எண்ணிய எல்லாவரங்களையும் மேன்மையாகத் தரவல்லது, இந்தக் குங்குமவனத்தில் மகாதேவ ராகிய சிவபெருமான் ஞானமூர்த்தியாய் விளங்குகின்றார், ஞானானந்த சொரூபியாகிய அவரும் போகமோக்ஷங்களைக் கொடுக்க கூடியவர். இந்தக் குங்குமவனத்தையும் ஞானலிங்கத்தையும் சொல்லக்கேட்டால் எல்லாப்பாவங்களும் நீங்கும்; தரிசித்தால் சமஸ்தசித்தியும் உண்டாகும். ஒருக்கால் இருதயத்தில் தியானித்தாலும் அஷ்டஐசுவரியம் முதலிய சகலசம்பத்துக்களும் அதி சீக்கிரத்தில் உண்டாகும். சம்புவாகிய ஞானலிங்கத்தை அருச்சனைசெய்தாலும் செய்வித்தாலும் மோக்ஷமுண்டாகும். இதிற் சந்தேகமேயில்லை. சர்வபூதங்களுக்கும் பிராணப்பிரதிஷ்டை செய்து பிராணவாயுவு ரூபமாய்விளங்கும் ஞானானந்த ரூபமான தேவியே அவ்விடத்தில் விளங்குகின்றாள், எல்லாக்குணங்களும் நிறைந்தவளும் சமஸ்தசம்பத்தையுங் கொடுக்ககூடியவளும் மகிஷாசூரனைக்கொன்றமையால் சர்வதேவர்களாலும் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவளாம் அந்தஞானவல்லியே குங்குமாரண்ணிய க்ஷேத்திரத்தில் எக்காலமும் விளங்குகின்றாள். இன்னும் அவ்விடத்தில் கிரமப்படி தெரிந்து ஸ்நானம் செய்கின்றவர்களுடைய சர்வபாபங்களையும் சாபங்களையும் போக்கக்கூடிய ஏழுதீர்த்தங்களுள்ளன; ஆதலால், முனீச்வரர்களாகிய நீங்கள்

அந்த இடத்திற்குச் சீக்கிரமாகப் போய்ச் சேருங்கள், என்று ஆகாசவாணி சொல்லிய வார்த்தைகளைத் தபசிகளாகிய ரிஷிகள் கேட்டுச் சாதுக்களாகிய சப்தரிஷிகளும், ஜமதக்கினி மகரிஷியும் திருவாரூரினின்றும் குங்குமாரண்ணிய க்ஷேத்திரத்திற்கு வரப் புறப்பட்டார்கள். புறப்பட்டவர்கள் முதலில் கீழ்வேளூரிலுள்ள ஸ்ரீ அக்ஷயலிங்கேசனைத் தெரிசித்து, ஆநந்த மிகுதியுடையவர்களாய்ப் பக்தி சிரத்தையோடு நமஸ்கரித்து, அவரிடத்து அனுக்ஞைபெற்றுக்கொண்டு, வியாசாச்சிரமத்திற்கு வந்து வியாசலிங்கப் பெருமானை மிகுதியாக நமஸ்கரித்துத் தோத்திரித்து, அதிக சுபத்தையுடையவர்களாய் விடைபெற்று, சிக்கில் க்ஷேத்திரத்தில் உள்ள ஸ்ரீ நவநீத புரீச்வரரை வந்து தெரிசித்து, ஸ்ரீ வெண்ணெய்லிங்கப் பெருமானை சுகந்த தைலம், பஞ்சகௌவியம், பஞ்சாமிர்தம் முதலிய உயர்ந்த பதார்த்தங்களால் அபிஷேகம் செய்து, விதிப்படிப் பூசித்துச் சர்க்கரைப் பொங்கல் பருப்புப் பொங்கல் தயிரன்னம் முதலிய அன்னவகைகளும், தேங்குழல் வடை அதிரசம் புட்டு லட்டு முதலிய பக்ஷண வகைகளும், சுகந்தபானீய தாம்பூலங்களும் நிவேதித்து, மல்லிகை முதலிய அனேகவித புஷ்பங்களாலும் வில்வம் முதலியவற்றாலும் அலங்காரமாக அருச்சனை செய்து, தூபதீபம் முதலிய சோடசோபசாரங்களையுஞ் செய்து, ஸ்தோத்தரித்து நமஸ்கரித்து, அவ்விடத்தில் விடைபெற்றுக்கொண்டு, ஸ்ரீ குங்குமாரண்ணிய க்ஷேத்திரத்தையடைந்து, ஸ்ரீ ஞானேச்வரனையும் ஞானவல்லியையுந் தெரிசித்து, அந்த க்ஷேத்திரத்திற்கு கிழக்கே, மிகுந்த பிரீதியோடும் ஷட்கோணபீடம் ஸ்தாபித்து அகோர மந்திரத்தைச் செபித்து ஸ்ரீ ஞானலிங்கத்தையும் ஞானாம்பிகையையும் இருதயத்தில் வைத்து ஏகாக்கிர மனதோடு தியானித்து தவஞ்செய்து, பின் ஞானேச்வரனைப் பூசிக்க நினைத்து, பூஜாதிரவியங்களைச் சேகரித்துப் பாத்திய ஆசமன அர்க்கியங்களை வைத்துக்கொண்டு, ஸ்தானசுத்தி பூதசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி முதலிய நால் வகைச்சுத்திகளையுஞ் செய்து, லிங்கசுத்தியாகிய அபிஷேகத்தின் ஆரம்பத்தில் ஸ்நபனம் பஞ்சகௌவியம் ருத்திரகும்பம் சங்கம் முதலியவைகளைப் பூசித்து வைத்துக்கொண்டு, முதலில் ஷடுத்

தாசன பூசை செய்து, அர்க்கியங் கொடுத்துச் சுகந்த தைலம் மாப்பொடி நெல்லிமுள்ளி மஞ்சட்பொடி திரவியப்பட்டை முதலியவற்றால் அபிஷேகித்து, பஞ்சகௌவியம் பஞ்சாமிர்தம் வாழைப்பழம் மாம்பழம் பலாப்பழம் முதலியவைகளை அபிஷேகித்து, பின்னும் சர்க்கரை தேன் புத்துருக்குநெய் இளவெந்நீர் பால் தயிர் ஜலநீர் முதலியவைகளாலும் அபிஷேகித்து, பின்னும் எலுமிச்சம்பழம் நாரத்தம்பழம் மாதுளம்பழம் தமரத்தம்பழம் செங்கரும்பு முதலியவற்றால் அபிஷேகித்து, பன்னீர் குங்குமப்பூ பச்சைக்கர்ப்பூரம் சுகந்தசந்தனம் இவை அபிஷேகித்துக், கஸ்தூரி திலகம் திருச்சாந்து புனுகுசட்டம் முதலிய சாத்தி, புஷ்பமாலை யணிந்து, அலங்கார நைவேத்திய கர்ப்பூரஞ் செய்து, சந்தனாபிஷேகத்தைக் கொண்டாடிப் பின் கலைய சிருங்கத்தாலும் சங்கங்களாலும் ஏகதாரை சகஸ்திர தாரை முதலியவற்றாலும் நவரெத்தினங்களாலு மபிஷேகித்து ஸ்நான கும்பம் ருத்திர கும்பம் முதலிய கும்பங்களை ஸ்ரீ சூக்தம் புருஷ சூக்தம் ருத்திரம் பஞ்ச சாந்தி முதலியவைகளை, ருக்வேத சாமவேத வாக்கியங்களாலும் சுவரத்தோடும் சிவாகமத்திலுள்ள பத மந்திரங்களைக் கிரமத்தோடும் உச்சரித்து, அபிஷேகஞ்செய்து, சிவார்க்கியங்கொடுத்து, திருவொற்றாடையால் துவட்டி, சரிகைப் பட்டு பீதாம்பரங்கள் சாத்தி, சுகந்த திலக மிட்டு, வயிரம் மாணிக்கம் முதலிய நவரெத்ந ஆபரணங்கள் சாத்தி, புஷ்பங்களால் காதுதோடு இண்டை கொண்டை மாலை வாகுமாலை முதலியவைகளால் அலங்கரித்து, வேத மந்திரத்தோடு சுவர்ணத்தினாலும் நூலினாலும் விதிப்படிச் செய்யப்பட்ட எக்ஞோபவீதங்களைச் சாத்தி, வேத சிவாகம மந்திரங்களால் மல்லிகை மாலதி கரவீரம் சந்தன புஷ்பம் நந்தியாவர்த்தகம் புன்னாகம் பாதிரி தாமரை வில்வம் முதலிய புஷ்பங்களால் பூசித்து, தூபதீபங் கொடுத்து, செஞ்சம்பா நெல்லரிசியன்னம் பருப்பு நெய் கறிவகைகள், அப்பளம் வடை அதிரசம் லட்டு மோதகம் முதலிய பக்ஷணங்கள், பருப்புப் பொங்கல் சர்க்கரைப் பொங்கல் ஏலம்சேர்ந்த கற்கண்டு பொங்கல் பாயசம் தயிரன்னம் எள்ளன்னம் உளுந்தன்னம் தேங்

காய்திருகல் இவைகளை மதுவாதா முதலிய வேத மந்திரங்களைச் சொல்லி நிவேதனஞ்செய்து, சுத்தபானீயங் கொடுத்து, சந்தனஞ் சாத்தி, அலங்கார தீபமுதல் சோடசோபசாரமுஞ்செய்து, சகஸ்திர நாமார்ச்சனை செய்து, தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை நல்முத்துச் சுண்ணம் முதலிய நிவேதித்து, அலங்கார கர்ப்பூரஞ்செய்து, பஞ்சாக்ஷரத்தைச் செபித்து, சிவோதாதா முதலிய ஆகம வாக்கியத்தால் ஜப சமர்ப்பணஞ்செய்து, ஐந்து பிரதக்ஷணமும் சாஷ்டாங்க நமஸ்காரமுஞ் செய்து, வேத மந்திரங்களால் ஸ்தோத்தரித்து, அந்த சுவாமியின் அக்கினி திக்கிலுள்ள தீர்த்தத்தில் விதிப்படி சித்திரை மாதம் பௌர்ணிமை கூடிய சித்திரை நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ்செய்து, அந்தப்பலத்தை ஜமதக்கினி பகவானுக்குக் கொடுக்க, அவர் அதைப் பெற்றுப் பாடலிபுர ராஜஸ்திரீயைக் காமப்பார்வையால் பார்த்த பாபத்தை நிவர்த்தி செய்துகொண்டார். அந்த ஞான தீர்த்தத்தின் அக்கினி மூலையில் ஒரு தாசி ஸ்நானஞ்செய்து மேன்மையடைந்த சரித்திரமு முண்டு என்று நந்திகேசுரர் சொல்ல, அதைச் சொல்லவேண்டும் என்று சம்பரமுனிவர் கேட்க, நந்திதேவர் சொல்லுகின்றார்.

ஜமதக்கினி முனிவர் பாவம் நீங்கிய படலம் முற்றிற்று.

---

## தாசி வரம் பெறு படலம்.

---

முன் பிர்மாவானவர் உலோகங்களைச் சிருஷ்டித்துத் திலோத்தமை யென்னும் பெண்ணையும் சிருஷ்டித்தார். அவளுடைய ரூபத்தைப்பார்த்து மிகுந்த காமமுடையவராய் ஏ! திலோத்தமையே! நீ என்னைக்கூடி என் காம விரகத்தைத் தணிக்க வேண்டும் என்றார். அதற்குத் திலோத்தமை நான் மிக்க அழகுள்ளவளாயினும் உம்மால் படைக்கப்பட்டதால் உமக்குப் பெண்ணாயினேன்; என்னைக் கூடவேண்டும் என்று நீர் சொல்லுதல் முறையாகுமா என்று கேட்டாள். இந்த வார்த்தையைக் கேட்டவுடன் பிரம்மா மிகுந்த கோபத்தை யடைந்து என்

MAHAMAHOPADHYAYA ... IYER LIBRARY

வார்த்தையைத் தட்டியபடியால் பூலோகத்தில் தாசி குலத்திற் பிறந்து கற்பு நெறியில்லாத பொது மகளாகக் கடவாயென்று சபித்தார். அதைக்கேட்ட திலோத்தமை மிகவும் மனம் வருந்தித் தகாதவிஷயத்தில் சாபங்கொடுத்த உமக்கும் பூலோகத்தில் ஆலயம் தனியாக இல்லாமற் போகக்கடவதென்று சொல்லிப் பிர்மாவின் சாபத்தினால் திலோத்தமையானவள் காஞ்சி புரத்தில் பொதுமகளாகிய தாசி வமிசத்தில் மிக்க அழகோடும் பிறந்து, யௌவனதிசையடைந்து, ஜாரையாய் விபசாரம் செய்யப்பட்டவளாயும், வழியிற்போகின்றவர்களை எல்லாம் சிந்திக்கக் கூடியவளாயும் பரதநாட்டியத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவளாயும், ஒவ்வொரு நாளும் தன்னை வந்து கூடுபவர்கள் அறுநூறு ரூபாய் கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்பவளாயும், இருந்துகொண்டிருக்கின்ற காலத்து, மேன்மையுடைய ஒரு பிராமணன் விதிவசத்தால் அவளைக்கண்டு இச்சித்து, அவளிடத்தில் சென்று, உன்னுடைய அழகில் நான் மிகவும் ஈடுபட்டேன், என்னைக்கூடி யென் மோகத்தைத் தணிக்க வேண்டும் என்று கேட்க, நாள் ஒன்றுக்கு ரூபாய் அறுநூறு கொடுத்தால் உம்முடைய விருப்பம் நிறைவேறும் என்று சொன்னவுடன், தன்னுடைய வீடுமுதலிய தாவரசங்கம சொத்துக்களையெல்லாம் விற்று, அறுநூறு ரூபாய் சேர்த்து அவளிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்தான்; அந்தத்தொகையைப் பெற்றுச் சந்தோஷமுகங்காட்டி, இன்றிரவு வந்து உம்முடைய இஷ்டப்படி மோகத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம், என்று சொன்னவுடன், பிராமணன் மிகுந்த ஆசையோடும் வந்து, தன்னையலங்கரித்துக்கொண்டு இரவில் அவள் வீட்டிற்குப்போய்த் தனக்குக் காமசுகத்தைக் கொடுக்கவேண்டும் என்று கெஞ்சினான். கெஞ்சின பிராமணனை அந்தத் தாசியானவள், நீ யார், உன்னை யிதற்கு முன் நாள் கண்டதேயில்லை; யென்னைச்சேருவது உன்னால் முடியாது என்று நிராகரித்துப்பேசவும், அவன் மனம் வருந்தி மிகுந்த கோபத்துடன் அவள் வீட்டை விட்டு வெளியில் வந்து தெருவில் நின்றுகொண்டு கற்பு நெறியில்லா விலைமகளிலும் ஜாரையாய் உள்ளதாசியிற்கடையான வேசியே! என்னுடைய

தெக்ஷணையைப் பெற்றுக்கொண்டு எனக்குக் காம சுகங்கொடாமல் மோசம் செய்தபடியால் உன்னுடைய பொருள் முழுவதும் சீக்கிரத்தில் நாசமடையக் கடவது, நீ வஞ்சனைசெய்து பிறர் பொருளை யபகரித்தற்கு ஏதுவாயிருக்கின்ற உன்னுடைய யோனித்துவாரம் புழுத்துப்போகக்கடவது, என்று சாபத்தைக் கொடுத்தான். அந்த சாபத்தினுல் அன்றிரவே அவள் வீட்டில் திருடர்கள் புகுந்து அவள் சொத்துக்களை யெல்லாங் கொள்ளை யடித்துக்கொண்டு போய்விட்டார்கள். மறுதினத்தில் அவளுக்கு யோனிப்புற்று என்னும் வியாதியுண்டாய்ப் புழுச்சொரிய, அவளுக்கு வேண்டியவர்கள் அதற்குத் தகுந்த மணி மந்த்ர அவுஷதங்களைப் பிரயோகஞ்செய்தும் அது தீராமையால், அவள் மிககவும் வருந்தி, ஹா! ஹா! வென்று கதறி அழுது தன்கையில் பொருள் இல்லாமையாலும் பொருள் தேடுவதற்கும் வேறு மார்க்கம் இல்லாமையாலும், பிச்சையெடுத்துச் சாப்பிட்டு அனேக க்ஷேத்திரங்களைத் தெரிசித்துக்கொண்டு, அனேக தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும் தீராமல், வெகு நாளலைந்து ஞானலிங்கம் எழுந்தருளி யிருக்கும் குங்குமாரணியம் வந்து ஞானதீர்த்தத்தில் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக் கிழமையில் ஸ்நானஞ் செய்து ஞானலிங்கப்பெருமானைத் தெரிசித்ததும், அப்பொழுதே தன் வியாதி நீங்கப்பெற்று, முன்னுள்ள அழகிய தேஜசையடைந்திருந்தாள். உடனே தேவர்கள் புஷ்ப விமானங் கொண்டுவந்து அதில் அவளையேற்றி, இந்திரலோகத்திற்கு அழைத்துச்சென்று, தேவ பதத்திலுள்ள பழய திலோத்தமை ஸ்தானத்தைக் கொடுத்தார்கள். பின்னும் அந்த ஞானதீர்த்தத்தின் மகிமை யனேக மிருக்கின்றன என்று, சம்பர முனிவரைப் பார்த்து, நந்தியம்பெருமான் சொல்ல, அவைகளையும் சொல்லியருள வேண்டுமென்று பிரார்த்தித்தவுடன், இந்த ஞான தீர்த்தத்தின் தென் கரையில் கழுதை யொன்று ஸ்நானஞ் செய்து மோக்ஷ மடைந்தது, அச் சரித்திரத்தையும் சொல்லுகிறேன், கேளும், என்று சொன்னுர்.

திலோத்தமை சாபம்நீங்கு படலம் முற்றிற்று.

## கழுதை வரம் பெறு படலம்.

நந்திகேசுரர், சம்பர முனிவரைப் பார்த்துக் கோதாவரி நதி தீரத்தில் மிகுந்த பூமியுடையவனும், பயிர்செய்யுந் தொழிலே கொண்டவனும் தன் குலத்திற்கேற்ப வேதம் ஓதல் முதலிய இல்லாதவனும், கொஞ்சமும் தருமம் என்பதை யறியாதவனும் திரவியத்தை ஏராளமாகத் தேடினதே யல்லாமல் தான் அநுபவியாமலும் சற்பாத்திரங்களில் செலவிடாமலும் மேலும் மேலும் அதர்ம வட்டிக்குக் கடன் கொடுத்தும் அதிக பூமிகளைச் சேர்த்துக்கொண்டும், குங்குமம் சுமந்த கழுதை போன்றவனாக, கோபாலன் என்னும் ஓர் பிராமணன் இருந்தான். ஒரு நாள் நடுப் பகலில் மிக்கப் பசியுள்ளவனாகிய ஒரு தபசி அவனிடஞ் சென்று பசி தணியக் கொஞ்சம் ஆகாரங் கேட்க, இல்லையென்று மறுத்தும், சேரிம்பேரியே யென்று தபசியை நிந்தித்துஞ் சொன்னான். உடனே தபசி மனம் வருந்திச் சென்றதும், பிராமணன் இறந்து கழுதையாய்ப் பிறந்து, மலைக் குறவனுக்கும் வண்ணானுக்கும் மிகுந்த சுமைகளைச் சுமந்து உழைத்துப் பின் ஒரு நாள் நெறி கெட்டு ஓடி, அநேக தேசங்களைச் சுற்றிக்கொண்டு, பின் குங்கும வனத்திற்கு வந்து, மாசி மாதம் பௌர்ணிமையோடு கூடிய மகத்தில், ஞானதீர்த்தத்தின் தென்பாகத்தில் விழுந்து ஸ்நானஞ் செய்தது. ஸ்நானஞ் செய்தவுடன் அதன் கழுதை வடிவம் நீங்கிப் பூர்வ பிராமணவடிவம் பெற்றுத் தேவாமிசத் தோடும் விளங்கி, தீர்த்தக்கரையிலுள்ள கணபதியையும், ஞானலிங்கப்பெருமானையும் தெரிசித்துப் பிரதக்ஷணஞ் செய்தவுடன், தேவர்கள் திவ்யமான புஷ்ப விமானங் கொண்டுவந்து அதில் ஏற்றிச் சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்றார்கள். பின்னும், குங்குமாரணிய க்ஷேத்திரத்தில் ஞானதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து ஞானலிங்கப் பெருமானைத் தெரிசித்துப் புத்திர சோகம் நீங்கிப் புத்திரப் பேறடைந்த ஒரு சரித்திரத்தையுஞ் சொல்லுகின்றேன்; அதையும் சாவதானமாகக் கேளும், என்று, சம்பர முனிவரைப் பார்த்து நந்திகேசுரர் சொல்லுகின்றார்.

கழுதை வரம்பெறு படலம் முற்றிற்று.

## கிருஷ்ண சாஸ்திரி புத்திரப் பேறடைந்த படலம்.

நந்திகேசுரர் சம்பாரை நோக்கி இந்தச் சரித்திரம் மிகவும் புண்ணியமானதும் மேன்மையைத் தரத்தகுந்ததுமாயுள்ளது. இது மிகவும் குஹ்யமான ரகசியமானதால், இதை நீர் சாவதானமாகக் கேளும் என்று சொல்லத் தொடங்கினர். முன்னொரு காலத்தில் கிருஷ்ணா நதி தீரத்தில் வேதவித்துக்களாகிய பிராமணர்கள் நிறைந்த அக்கிரகாரத்தில் எல்லா சாஸ்திரங்களையும் படித்தவரும், வேத வேதாந்த தத்துவங்களை யுணர்ந்தவரும் அக்கினிஹோத்திரம் முதலிய சற்கருமங்களை யனுஷ்டிக்கின்றவரும், பிராம்மணாசாரம் முழுமையும் உடையவரும் வேதாந்த ஞானத்தை முழுதும் உடையவரும், நல்ல புத்திமானுமாகிய, கிருஷ்ண சாஸ்திரி என்பவர் ஒருவரிருந்தார். அவருக்கு அவரைப்போன்ற யோக்கியதை யுடையவனும் பிதாவிடத்தில் மிக்க பக்தி சிரத்தை யுடையவனும் தன்னுடைய கையினுலேயே பத்திர புஷ்பஞ் சமித்துக்களைத் தேடிப் பிதாவின் அக்கினி காரியங் தேவபூசை முதலியவைகளுக்குக் கொடுப்பவனும், வேத சாஸ்திர பண்டிதனுமான லோகநாதன் என்னும் ஒரு குமாரன் இருந்தான். அவனுக்கு விதிவசத்தால் வியாதி யேற்பட்டு மரணம் உண்டாகவே, புத்திரனுடைய அகால மரணத்தைக் கேட்ட பிதாவாகிய கிருஷ்ண சாஸ்திரி உடனே மூர்ச்சித்துப் பூமியில் விழுந்து ஒரு முகூர்த்த காலம் பிரக்ஞையற்றுக் கிடந்தார். அப்படிக் கிடந்தவரைப் பந்துக்கள் தேற்றிப் புத்திரனுக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளைச் செய்வித்தார்கள். கிரியைகள் செய்து முடிந்தவுடன் கிருஷ்ண சாஸ்திரியைப் பார்த்து நீர் புண்ணியஞ் செய்ததோடு கடைசியாய் மிகுந்த பாபத்தையும் செய்திருந்தபடியால் இவ்விதம் புத்திரசோகம் நேர்ந்ததென்று சொல்ல, கிருஷ்ண சாஸ்திரி மிகுந்த கோபத்தை யுடையவராய்ப் பந்துக்களைப் பார்த்து எனக்குச் சற்புத்திரன் உண்டானுல்தான் இனி இவ்விடம் வருவேன் என்று சொல்லித் தன்னுடைய சொத்துக்களை யெல்லாந் தருமஞ் செய்துவிட்டுத்

தன் மனைவியுடன் புண்ணிய ஸ்தல யாத்திரை செய்யும்படிப் புறப்பட்டுவிட்டார். புறப்பட்டவர் பல தேசங்களெல்லாம் சுற்றிப் பல க்ஷேத்திரங்களிலெல்லாம் சுவாமி தரிசனஞ் செய்தும் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து கொண்டு, முடிவில், இந்தக் குங்குமவனத்தையடைந்து ஞான தீர்த்த முதலிய சப்த தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து, ஞானவல்லி சமேதராகிய ஞானலிங்கப் பெருமானைத் தெரிசித்து அபிஷேக ஆராதனைகளெல்லாம் ஏராளமாகச் செய்து, பங்குனி மாதம் உத்திர நக்ஷத்திரத்தோடு கூடிய பௌர்ணிமையில் ஞான தீர்த்தத்திலும் தேவ தீர்த்தத்திலும் ஸ்நானஞ் செய்தவுடன் அவருக்கு மிகுந்த ஞானமுண்டாய், இந்தக் குங்குமவன க்ஷேத்திரத்திலேயே வசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது, அவருக்குச் சிறந்த சற்புத்திர பாக்கியமும் முன் இருந்ததைப் பார்க்கிலும்மிகுந்தபொருள்முதலிய சம்பத்துகளுமுண்டாயின. பிறகு ஞானலிங்கப் பெருமானிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, தன்னுடைய சொந்த ஊருக்குப் போய்ப் புத்திர மித்திர களத்திராதிகளுடன் வெகு காலம் வாழ்ந்திருந்து முடிவில் சிவ சாயுச்சியப் பேற்றையடைந்து விளங்கினார்.

கிருஷ்ண சாஸ்திரி புத்திரப் பேறடைந்த படலம் முற்றிற்று.

---

நந்திகேசுரர் சம்பர முனிவரைப் பார்த்து இன்னும் ஞானலிங்கத்தின் மகிமையைச் சொல்லுகின்றேன், சாவதானமாகக் கேளும், என்று சொல்லத் தொடங்கினார். நர்மதா நதி தீரத்தில் வசிப்பவரும் தவசிரேஷ்டரும் நித்தியம் யோகாப்பியாசஞ் செய்பவரும் பிரம்ம ஞானியுமாகிய வர முனி என்பவர் சில காலம் ஜலத்தையே ஆகாரமாகக் கொண்டுஞ் சில காலம் கந்த மூல பலாதிகளை ஆகாரமாகக் கொண்டுஞ் சில காலம் சருகு பட்சணஞ் செய்துஞ் சில காலம் வேறு பட்சணமின்றி வாயு பட்சணஞ் செய்தும், அரிய தவத்தைச் செய்துக்கொண்டிருந்தார். அவருக்கு மிகுந்த லக்ஷணத்தோடு கூடிய அழகுள்ளவளாயும் ரூப யௌவன சம்பன்னளாயும், மகா

# நந்திகேசுரர் சம்பரமுனிவரைப்பார்த்து மறுபடியும் ஞானலிங்கத்தின் மகிமையைச் சொல்லும் படலம்.

---

உத்தமியாயும் பர்த்தாவுக்குப் பணிவிடை செய்தலே தனக்கு உரிய கடமையாகக் கொண்டவளாயும் சுசீலை என்னும் ஓர் ஸ்திரீ யிருந்தாள். தன் புருஷன் நிராகாரமாய்த் தவஞ்செய்தலால் பதிவிரதையாகிய அந்த அம்மாளும் நிராகாரமாக இருந்தகாலத்துத் தேகம் நடக்க முடியாத அசக்த நிலைமையை அடைந்தது. அப்பொழுது அந்த அம்மாள் பஞ்சாக்ஷரத்தையே சதா ஜெபித்துக்கொண்டு ஞானசம்பன்னையாய்ச் சாதுக்களை மனதினால் பூஜித்து வந்தாள். அக்காலத்து, வாமனன் என்னும் அசுரன் முனிபத்தினியின் அழகைக்கண்டு மோகித்து, அவளைக்கெடுக்க எண்ணித் தன் மாயையால் நிராகாரமாயிருந்த முனிவரை ஆகாரம் செய்யும்படிக்கும் அதைப்பார்த்த பத்தினியும் ஆகாரத்தை உட்கொண்டு சரீர பலத்தை யடையும்படிக்கும் செய்வித்தான். இவன் மாயையால் முனிவரும் முனிவர் பத்தினியும் ஆசிரமத்தில் இருந்துகொண்டிருக்குங் காலத்தில் ஒரு நாள் அர்த்த ராத்திரியில் கோழி வடிவெடுத்துப் பொழுது விடியும் அடையாளமாகக் கூவினன். கோழி கூவின சத்தங்கேட்டு முனிவர் ஸ்நானத்திற்காகப் புறப்பட்டுவிட்டார். உடனே வாமனன் என்னும் அசுரன் முனிவர் வடிவத்தோடு பர்ணசாலையுட் புகுந்து, முனி பத்தினியாகிய சுசீலையைப் பலாத்காரஞ் செய்துகொண்டிருக்கையில், முனிசிரேஷ்டர் வந்து, வாமனன் என்னும் அசுரனையும் தன் பத்தினியையுங்கண்டு, கோபத்துடனே நான் இல்லாத காலத்து நீங்கள் இருவருந் தகாத நடக்கையில் இருந்தபடியால், கோழிவடிவெடுத்தே வருந்தக்கடவீர்கள் என்று சாபத்தைக்கொடுத்துப் பின்னுங் கோழிக் கூட்டங்கள் ஞானவான்களாகிய தவசிகள் இருக்கும் வனத்தில் வசிக்க யோக்கியமில்லாமல் போகக்கடவன என்றும் சபித்துத் தான் தவத்திற்குச் சென்றுவிட்டார். கோழி உருவடைந்த ரிஷிபத்தினியும், வாமனன் என்னும் அசுரனும், பல விடங்களி

னும் வருந்தித் திரிந்து குங்குமாரண்யத்திற்கு வந்து, ஞானலிங்கப் பெருமானையும், ஞானவல்லியையும் தெரிசித்து, வைகாசி மாதம் பௌர்ணமியோடு கூடிய விசாக நக்ஷத்திரத்தில் ஞானதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்ததும், கோழி உருவம் நீங்கி முனி பத்தினி உருவத்தையும், அசுர உருவத்தையும் அடைந்து காமமில்லாத ஞான்வான்களாய், அவ்விருவரும் விளங்குகையில், தேவர்கள் அவ்விருவருக்கும் இரு விமானங்கொண்டுவந்து கயிலாசத்திற்கு அழைத்துச்சென்று, சிவபெருமானைத் தெரிசனை செய்விக்க, அவ்விருவருக்கும், சிவபெருமான் சிவசாயுச்சியத்தைக் கொடுத்தருளினார். ஆனதால், ஞானதீர்த்தத்தின் பெருமை யென்றால் அளவிட்டுச்சொல்லும் தரமல்ல, என்று, இதன் பெருமையை நந்திகேசுரர் சம்பர முனிவருக்குச் சொல்லியருளினார்.

கோழி சாபம் நீங்கிய படலம் முற்றிற்று.

---

## சந்திரன் சாப விமோசனப் படலம்.

---

இன்னும் ஒரு அருமையான சரித்திரத்தைச் சொல்லுகின்றேன், சாவதான மனதோடு கேளும் என்று, சம்பரரைப் பார்த்து நந்திதேவர் சொல்லுகின்றார். நவக் கிரகங்களில் ஒருவராகிய வியாழ பகவானின் மனைவியாகிய தாரையால் மோகிக்கப்பட்ட சந்திரன், அவளை விரும்பி அவளிடத்தில் வெகு காலம் காம சுகத்தை யனுபவித்திருந்தான். அதை முனிவர் ஞான திருஷ்டியினால் பார்த்து உனக்கு க்ஷய ரோக முண்டாகக் கடவதென்று சாபங்கொடுத்தார். உடனே சாபத்தை யடைந்த சந்திரன் நாளுக்கு நாள் க்ஷயம் விருத்தி யடையப் பெற்று அனேக புண்ணிய க்ஷேத்திரங்களைத் தெரிசித்தும் அனேக புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தும் தீராமல், ஹரித்திரவன மென்றும், குங்குமவன மென்றும், சொல்லப்படுகிற குங்குமாரணியத்திற்கு வந்து, ஞானேச்வரனையும், ஞானவல்லியையும் தெரிசித்துப் பிரார்த்தித்து நமஸ்கரித்து ஞானதீர்த்தத்தின் ஈசான்ய பாகத்தில், மார்கழி மாதம் பௌர்ணமையோடு

கூடிய திருவாதிரையில் ஸ்நானஞ்செய்து, உடனே தன்னுடைய க்ஷய ரோகம் நீங்கப் பெற்று, ஞானத்தையும் அடைந்து விளங்கினர். ஆதலால் ஞானதீர்த்தமானது ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு எல்லா பாபங்களையும் போக்கி, சமஸ்த ரோகத்தையும் நிவர்த்தி செய்து அஷ்டைசுவரியத்தையுந் தரத்தக்கது:—

ஆதலால், இந்த ஸ்தல புராணத்தை வாசித்தவர்களும், கேட்டவர்களும், மிகுந்த புண்ணியத்தை யடைந்து, புத்திர பௌத்திராதிகளும் தன தான்னியாதி சம்பத்துகளும் நிறையப் பெற்று, அந்தியத்தில், சிவ சாயுச்ய பெரும் பேற்றையும் அடைவார்கள்.

ஸ்ரீ ஞானவல்லி சமேத ஞானேச்வராய நம: என்று நந்திகேசுரர் ஸ்தல புராணத்தைச் சொல்லிமுடித்ததும், சம்பர முனிவர் அநேகந்தரம் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் குங்குமாரணியத்தின் மற்ற தீர்த்தங்களையும் சொல்ல வேண்டும் என்று பிரார்த்தித்தார். நந்திகேசுரர் குங்குமாரணியத்தில் அக்கினி தீர்த்தம், ஞான தீர்த்தம், தேவ தீர்த்தம், சோம தீர்த்தம், யம தீர்த்தம், சந்திர தீர்த்தம், வேத தீர்த்தமென்று ஏழு தீர்த்தங்களுள்ளன. அவ்வுயிருக்குமிடத்தையும், அவைகளின் பெருமையையுஞ் சொல்லுகின்றேன், சாவதானமாகக் கேளும் என்று, சொல்லத்தொடங்கினர்.

ஸ்ரீ ஞான லிங்கத்தின் அக்கினி மூலையில் அக்கினி தீர்த்தமும், தெற்கே ஞானதீர்த்தமும், மேற்கே தேவ தீர்த்தமும், வடக்கே சோம தீர்த்தமும், வாயுதிக்கில் யமதீர்த்தமும், ஈசானதிக்கில் வேத தீர்த்தமும், கிழக்கில் சந்திர தீர்த்தமும், விளங்குகின்றன. சித்திரா பருவத்தில் அக்கினி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால், எல்லாப் பாவங்களும் நிவர்த்தியாகும். வைகாசி மாதம் பௌர்ணிமையில் தேவ தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால், எவ்விதமான பாவங்களும் நிவர்த்தியாவதுடன், அஞ்ஞானமும் நிவர்த்தியாய் அநேக அசுரர்கள் மேன்மை யடைந்திருக்கிறார்கள். ஆவணி மாதம் பௌர்ணிமையில் சோம தீர்த்

தத்தில் ஸ்நானஞ் செய்தால், இஷ்ட சித்திகளை யடையலாம்; அதில் கார்த்திகை மாதம் கடைசி ஞாயிற்றுக் கிழமையில் ஸ்நானஞ் செய்தால் எல்லா ரோகங்களும் நிவிர்த்தியாகும்; மார்கழி மாதம் பௌர்ணிமையில் ஞான தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால், பிரம்ம ஹத்தியாதி தோஷங்களெல்லாம் நிவிர்த்தியாகும்; மாசி மாதம் முழுமையும் யம தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால், தரித்திர முழுவதும் நிவிர்த்தியாய்ப் போக மோக்ஷங்களுங்கிடைக்கும்; பங்குனி மாதம் உத்திர நக்ஷத்திரத்தில் சந்திர தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால் சர்வ தோஷங்களும் நிவிர்த்தியாய்ப் போக மோக்ஷங்கள் கிடைக்கும். அற்பசி மாதம் யம தீர்த்தத்திலும் கோவிலிலுள்ள ஞான கூபம் என்ற கிணற்றிலும், ஸ்நானஞ் செய்தால் ஞான சம்பத்தோடு ஆயுள் விருத்தியும் உண்டாகும். இவ்விதமாக, இந்த மகாத்மியத்தைக் காசிபர் முதலிய மகாரிஷிகளால் பாடலிபுர மகாராஜா கேள்விப் பட்டுக் குடும்ப சகிதமாய் குங்குமாரணிய க்ஷேத்திரத்திற்கு வந்து ஞானலிங்கப் பெருமானையும், ஞானவல்லியையும், தெரிசித்துச் சப்த தீர்த்தங்களிலும், ஞான கூபத்திலும் ஸ்நானஞ் செய்து இந்திரனுடைய யானையாகிய ஐராவதம் பூசித்த மூல ஞானகணபதியையும் தெரிசித்து, வெற்றிவேலாயுதக்கடவுளாகிய ஸ்ரீ வள்ளியம்மை தெய்வயானை சமேத சுப்பிரமண்ணியக்கடவுளைப் பிரதிஷ்டை செய்து, ஆலயத் திருப்பணி முதலிய செய்து சுவாமியினிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு, தன்னுடைய பாடலிபுர நகரஞ்சென்று, சகல பாக்கியங்களோடும், வெகு நாள் வாழ்ந்திருந்து, சிவ சாயுச்சியப் பெரும் பேற்றை யடைந்து விளங்கினர். சுபம் மங்களம்.

வாழி ஞான லிங்கமும்
வாழி ஞான வல்லியும்
வாழி வேலாயுத வுள்ளலும்
வாழி சீரடி யாருமே.

குங்குமவன மென்னும் மஞ்சட் கொல்லை, ஸ்தலபுராணம் சம்பூரணம்.